Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 13
இதழ் 257

யாழ்ப்பாணம் ஐப்பசி 10 ரமழான் 7 புதன்கிழமை (27-10-71)

உலகப் புகழ்பெற்ற
"ஸ்ரார் மார்க்"
2 கலன் 3 கலன்
ஸ்பிரேயர்
(பித்தளை தெளிகருவி)
எம்மிடம் கிடைக்கும்
ஸ்டீல்சன்ஸ்
20/5, ஸ்ரான்லி றேட் - யாழ்ப்பாணம்.
போன்: 7035

# ஐ. நா. சபையில் நவசீனு; தைவான் வெளியேற்றம்!

## அல்பேனிய தீர்மானம் மகாசபையில் நிறைவேறியது

### 'அமெரிக்க முட்டுக்கட்டை' தோல்வி

நியூயோர்க், அக். 25

மக்கள் சீனக் குடியரசுக்கு ஐ. நா. சபையில் இடம் கிடைத்து விட்டது. இதுவரைகாலமும் சீனமக்கள் சார்பில் ஐ. நா. வில் அங்கத்துவம் வகித்துவந்த தைவான் சபையிலிருந்து வெளியேறறப் பட்டு விட்டது.

தேசிய சீனவென்று அழைக்கப்படும் தைவானை ஐ. நா. விலிருந்து வெளியேற்ற வேண்டும் என்றும் மக்கள் சீனக் குடியரசான கம்யூனிஸ்ட் சீனாவை ஐ. நா. வில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்து அல்பேனியா சமர்ப்பித்திருந்த தீர்மானம் மகாசபையில் இன்று நிறைவேறியது. இத்தீர்மானத்தை ஆதரித்து 76 நாடுகள் வாக்களித்தன. 35 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. 17 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. இலங்கை இந்தியா, பாகிஸ்தான், பிரிட்டன், கனடா, இத்தாலி போன்ற நாடுகள் அல்பேனிய தீர்மானத்தை ஆதரித்தவைகளில் சிலவாகும்.

சீனாவை ஐ. நா. வில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறும் தீர்மானம் வருடா வருடம் ஐ. நா. சபையில் கொண்டுவரப்பட்டு தோல்வியடைந்து வந்தது தெரிந்ததே.

இதற்கு அமெரிக்காவே முன்னோடியாக இருந்து வந்தது. இம்முறை கம்யூனிஸ்ட் சீனாவை ஐ. நா. சபையில் சேர்த்துக் கொள்வதற்கு அமெரிக்கா ஆதரவளிக்க முன்வந்தது. ஆனால் தைவானை வெளியேற்றுவதற்கு அது விரும்பவில்லை. இதனால் தைவானை வெளியேற்றப்படுவதைத் தடுப்பதற்காக அமெரிக்கா தனியாக ஒரு தீர்மானத்தை சமர்ப்பித்திருந்தது. சபையில் அங்கத்தவர்களின் மூன்றில் இரு பகுதியின் ஆதரவின்றி தைவானை வெளியேற்ற முடியாமல் செய்வதற்கு அமெரிக்கா முயன்றது. ஆனால் அந்தத் தீர்மானம் சபையில் தோல்வி [illegible] சேர்த்துக் கொள்ள வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தி இலங்கை பிரதம மந்திரி ஐ. நா. சபையில் சமீபத்தில் பேசியது இங்கு குறிப்பிடத்தக்கது. சீனாவுக்கு சட்ட ரீதியான இடம் தந்தால்தான் ஐ. நா. பூரணத்துவம் பெறும் என்று அவர் கூறியிருந்தார்.

1957-ம் ஆண்டு ஐ. நா. சபையில் பேசிய காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவும் சீனாவை ஐ. நா. வில் சேர்த்துக்கொள்ள வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்திப் பேசியிருந்தார்.

## சீனப் பிரதமருக்கு இலங்கை பாராட்டு

மக்கள் சீன ஐ. நா. சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதை குறித்து இலங்கை அரசின் பதில் தலைவர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா பிரதம மந்திரியின் சார்பில் பாராட்டுத் தந்தியொன்றை அனுப்பிவைத்தார்.

திரு. மைத்திரிபாலசேனநாயக்க இன்று வெளியிட்ட ஒருசெய்தியில் மக்கள் சீனாவுக்கு சட்டபூர்வமான இடம் கிடைத்துவமைக்காகவும் ஐ. நா. விலிருந்து தைவான் வெளியேற்றப் பட்டமைக்காகவும் தான் மகிழ்ச்சியடையவதாகக் கூறினார்.

சர்வதேச விவகாரங்களிலும் உலக அமைதியைப் பராமரிப்பதிலும் ஐ. நா. வின் திறமை இனி உயர்வதற்கு வழி பிறக்கும்என்றும் அவர் குறிப்பிட்டார்.

## கள்ளக்கடத்தலைத் தடுக்க சுங்கச்சட்டத்தில் மாறுதல்

யாழ்ப்பாணம், புதன்

பழசாகிப்போய்விட்ட சுங்கச்சட்டத்தைத் திருத்துவதற்கு அரசாங்கம் தீவிரமாக ஆலோசனைசெய்துவருகிறது. இதுசம்பந்தமாக நேற்று முன்தினம் உயர் அதிகாரிகளின் மகாநாடொன்றும் நடைபெற்றது.

இரத்தினக்கல் மோசடி, வல்வெட்டித்துறை மற்றும் பல பகுதிகளிலும் நடைபெறும் கடத்தல் சம்பந்தமாகவும் இவைகளைத்தடுப்பதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் இந்த மகாநாட்டில் ஆலோசனை செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது.

1869-ம் ஆண்டில் இயற்றப்பட்ட சுங்கச் சட்டம் இப்போது பத்தாம்பசலியாகி எதுவித பயனும் தரவில்லையென்றும் கடத்தல் முயற்சிகளைத் தடுப்பதற்கு இச்சட்ட விதிகள் உபயோகப்படவில்லையென்றும் மகாநாட்டில் கலந்துகொண்டவர்களில் பலரும் தெரிவித்தனராம்.

சுங்கப்பகுதி அதிகாரிகள், நிதி அமைச்சு அதிகாரிகள் இராணுவத் தளபதி, பொலிஸ் அதிபர் ஆகியோர்களுடன் வடபகுதிப் பொலிஸ் அதிபர், மன்னார், வவனியா உதவிப்பொலிஸ் அதிபர்களும் இம்மகாநாட்டில் கலந்துகொண்டதாகத் தெரிகிறது.

மாக். பகுதியில்

## சமாதானத்துண்டுவீசிய இந்திய சாமியார் கைது

புதுடில்லி, ஒக். 26

பாகிஸ்தான் பிரதேசத்தில் தம்சொந்த விமானத்தில் பறந்துசென்று சமாதானத் துண்டுப் பிரசுரங்களைப் போட்ட இந்தியரான சுவாமி விஷ்ணுதேவானந்த, லாகூரில் கைது செய்து காவலில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

லாகூர் பகுதியில் தமது இரு ஆசனங்கள்கொண்ட விமானத்தில் பறந்து சென்று சமாதானத் துண்டுப் பிரசுரங்களை இந்த சாமியார் வீசினாராம்.

லாகூரில் இவர் தமது விமானத்தை இறக்கிய போது பொலிசார் கைது செய்து காவலில் வைத்துள்ளனர்.

## மகாதேவா பாலத்தை மந்திரி பார்வையிடுவார்

யாழ்ப்பாணம், புதன்

பூநகரி மகாதேவா பாலத்தை நாளை மாலை தபால் மந்திரி திரு. செல்லையா குமாரசூரியர் பார்வையிடுவார். இதன் பின் அவர் இதுபற்றி அரசாங்கத்திற்கு அறிக்கையொன்று சமர்ப்பிப்பார் எனத் தெரியவருகிறது.

சேர நிலிற்கும் சங்குப்பிட்டிக்குமிடையிலுள்ள இடைவெளியை நிரப்புவதன் மூலம் பூநகரிப் பகுதியில் பல குடியேற்றத்திட்டங்களை ஆரம்பித்து உப-உணவு உற்பத்தியை அதிகரிக்கலாம் என வடபகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் வற்புறுத்தி வந்தனர். மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்திலும் பல தடவை இவ்விஷயம் வற்புறுத்தப் பட்டுவந்தது. திருக்கேதீஸ்வரம் மன்னார் போன்ற பகுதிகளுக்கு இதன்மூலம் போக்குவரத்தை சீராக்கலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

கடந்த 15 வருடகாலத்திற்கு மேலாக பூர்த்திசெய்யப்படாமலிருக்கும் மகாதேவா பாலத்தை நேரில் பார்வையிட அமைச்சர் குமாரசூரியர் முடிவுசெய்துள்ளார். அமைச்சருக்கு நாளை மாலை பூநகரி கிராம சபையினால் பொதுவரவேற்பு ஒன்று அளிக்கப்படவிருக்கிறது.

நாளை காலை 8 மணிக்கு பலாலி விமான நிலையத்தை வந்தடையும் அமைச்சருக்கு அங்கு வரவேற்பளிக்கப்படும். காலை 10 மணிக்கு காரைநகரில் சுமார் இரண்டு லட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்டுள்ள தபால் நிலையத்தை அமைச்சர் திறந்து வைப்பார்.

நாளை மாலை பரந்தனில் சுமார் 2 லட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்ட தபால் நிலையத்தை திறந்து வைப்பார். அதன்பின் பூநகரி கிராமசபையினால் அமைச்சருக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

இம்மாதம் 29-ம் தேதி காலை நல்லூரில் திறவப்படும் தற்காலிக தபால் நிலையத்தில் அமைச்சர் நாவலர் முத்திரை வெளியீட்டு விழாவில் கலந்து கொள்வார். காலை 10 மணிக்கு மானிப்பாயில் நடைபெறும் ஆனந்தகுமாரசாமி முத்திரை வெளியீட்டுவிழாவில் அமைச்சர் கலந்து கொள்வார்.

---

ஜார்ஜியாவில்

## தேயிலை உற்பத்தி இயந்திரமயம்

திபிலிஸி, அக். 26

தேயிலையிலிருந்து அப்புறமற்ற பகுதிகளை அப்புறப்படுத்தும் இயந்திரம் ஒன்றை ஜார்ஜியா தேயிலைத்துறை நிறுவனம் கண்டுபிடித்துள்ளது.

தேயிலை உற்பத்தியில் கடுமீ சாதனங்களைப் புகுத்தும் திட்டத்தில் இது புதுமையாகும்.

தேயிலைத் தோட்டங்களை பராமரிப்பது முதல் தேயிலைக்கொழுந்து பறிப்பது வரை ஜார்ஜியாவில் ஏற்கனவே இயந்திர மயமாக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் 260,000 தொன் தேயிலைக் கொழுந்து பறிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜேர்மனியில் பயிற்றப்பட்ட மெசினிய வாளர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3625

### தேவை

கைத்தறியில் நெசவு செய்ய அனுபவமுள்ள பெண்கள் தேவை. டொபியில் வேலை செய்யக் கூடியவர்கள் விரும்பத்தக்கது. சாந்தபுரம் மில்க்ஸ், 7, 2ம் ஒழுங்கை, பிரவுண் வீதி யாழ்ப்பாணம். 3639

### விற்பனைக்கு

அரைத்த சந்தனம்; உயர் தரமான சந்தனக்கட்டைகளை யந்திரத்தில் அரைத்த சந்தனக் குழம்பு, வாசனை மிக்கது! குளிர்ச்சியானது கோவில்களிலும் எல்லாவித மான வைபவங்களிலும் விழாக்களிலும் உபயோகிக்கச் சிறந்தது. எஸ். சுப்பிரமணியம், கொம்பனி, மருந்துக்கடை யாழ்ப்பாணம். 3624

அதிகமுட்டையிட்டு அதிக இலாபம். அடைய உங்கள் கோழிகளுக்கு உணவில் சிப்பித்தூள் சிப்பித்துண்டுகளைச் சேர்த்துக்கொள்ளவும், மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறலாம். முகவரி இரைண்டிங் மில்ஸ், 443, கே. கே. எஸ். றோட் யாழ்ப்பாணம். 3675

### விற்பனைக்கு

கோப்பாய் தெற்கில் 4-ம் கட்டைப்படியில் குடியிருப்புக்கு வசதியான ஐந்து பரப்புக்காணி, பருத்தித்துறை பிரதான வீதியில் தயார் கந்தோருக்கருகாமையில் விற்பனைக்குண்டு. உரிமையாளர்: எஸ். ஏ. அண்ணாசாமி, கோப்பாய் தெற்கு. கோப்பாய். 3692

ஜெர்மன் (டெமி 1/2) பிளேற்றின் அச்சுயந்திரம் 3 HP லிஸ்டர் எஞ்ஜினுடன். மர எழுத்துக்களும் உண்டு. கலாவனை அச்சகம், வியாபாரிமூலை, பருத்தித்துறை. 3693

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### தேவை

சேசப் செய்வதில் அனுபவம் வாய்ந்தவர் ஒருவர் தேவை அனுபவத்திற்குரிய சான்றிதழ்களுடன், பெற விரும்பும் சம்பளத்தையும் குறிப்பிட்டு 31-10-71க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 3681 C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 3681

## 39வருட சேவை

அருநகர், செவ்

கடந்த 39 வருடகாலம் அரசினர் சுகாதார சேவையில் ஆண்பரிசாரகராக கடமையாற்றிய திரு. மு. வ. சிவசுப்பிரமணியம் இம்மாத முடிவில் ஓய்வு பெறுகின்றார். இவர் தனது சேவைக்காலத்தில் அகில இலங்கை அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர் சங்க நிர்வாக உறுப்பினராகவும், கணக்காய்வாளராகவும், தொடர்ந்துதேசிய அரசாங்க சுகாதாரசேவைத் தொழிலாளர் சங்க பிரசாரச்செயலாளராகவும் இருந்து சுகாதார சிறு சேவையாளர் மத்தியில் பணியாற்றிவந்துள்ளார். இவர் யாழ். செனக்கிய சேவைச்சிக்கன கடன் நிவாரணச் சங்கத்தில் நிர்வாக உறுப்பினராகவும் மரண சகாயக்குழுத் தலைவராகவும் யாழ். வைத்தியசாலை சிற்றூண்டிச் சாலை நிர்வாக உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார் இவருக்கு சேவை நலம் பாராட்டு ஒன்றை நடத்துவதற்கு தேசிய சுகாதார சேவையாளர் சங்கம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

## "சங்கத்திடம் பெற்றுக் கொள்ளலாம்"

எழுதுமட்டுவாழ், செவ்

"சித்த ஆயுள்வேத வைத்தியர்கள் தமக்கு வேண்டிய மருந்துச்சரக்குகளை, மருந்துக்கடைகளில் வழமையாகப்பெற்றுவந்தனர். ஆனால் இனிமேல் வடபகுதி சித்தாயுள்வேத வைத்தியர்களுக்கு வேண்டிய குங்குமப்பூ, செந்தூரம் காண்டாமிருகக்கொம்பு போன்ற பிரதான மருந்துச்சரக்குகளை வடபகுதி சித்த ஆயுள்வேத வைத்தியச் சங்கம் நேரடியாகப் பெற்று தேவைக்கேற்றபடி பகிர்ந்து கொடுப்பதாகவும், கட்டுறவுச்சித்தாயுள்வேத வைத்தியப் பகுதித்தலைவர், வடபகுதி ஆயுள்வேத வைத்திய சங்கத் தலைவரும் சகல மருந்துவகைகளையும் எமது சங்க மூலம் கொடுக்கவேண்டுமென்ற ஒப்பந்தம் ஒன்று செய்துள்ளதாகவும், வடபகுதி சித்தாயுள்வேதவைத்தியர்கள் சகலர்க்கும் அனுப்பிய சுற்றறிக்கையில் வெளியிட்டுள்ளது. தெரிகின்றது.

—

நெடுந்தீவிலிருந்து

## 'எரு ஏற்றுவதற்கு தடைவிதிக்க வேண்டும்'

நெடுந்தீவு, செவ்

நெடுந்தீவு காரியாதிகாரி திரு. ஏ. ஸி. செபநாயகம் தலைமையில் நெடுந்தீவுக் கிராமசபை மண்டபத்தில் நடைபெற்ற அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் நெடுந்தீவு மக்களால் உற்பத்தி செய்யப்படும்பனம்பொருட்களை விலைக்கு வாங்குவதற்கு ஒரு கொள்வனவு நிலையம் அமைக்கவேண்டுமென்றும் கோழிப்பண்ணை அமைத்தல் மந்தை வளர்ப்பு ஆகிய வற்றை அரசாங்கம் அங்கீகரித்துள்ளமையால் இவற்றுக்கான ஆரம்பவேலைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. இங்குள்ள மாட்டு எரு வருடாவருடம் வெளி இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் உள்ளூர் மண்ணுக்குப் பசளை குன்றிப்போவதால் தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு எரு ஏற்றுமதிக்குத் தடைவிதிக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

......

## முருகனைவழிபடின் உட்பகையில்லை

கேதீஸ்வரம் செவ்

கந்தன் கலியுகவரதன் அசுரத்தனம் எனும் அஞ்ஞான இருளகற்ற ஞானப்பிழம்பாக அருள்புரிய வந்தான். முருகனைச் சிந்தித்து வந்திருப்போர்க்கு உட்பகைகளாலும்சரி புறப்பகைகளாலும்சரி அபாயம் ஏதுமில்லை 'சுற்றி நில்லாதே பகையே, துள்ளி வருகுது வேல்' என்ற பாரதியின் வாக்குகள் நிதர்சனமானவையே'

இவ்வாறு நாவுக்கரசன் ஸ்ரீ செல்வமுத்துமாரியம்மாள் கோவில்பூசகர்பிரம்ம ஸ்ரீ சிவசுப்பிரமணியஐயர் அக்கோவிலில் நடைபெற்ற கந்தசஷ்டி விசேடபூஜை ஆராதனைகளை யொட்டி பேசுகையில் குறிப்பிட்டார்.

## இந்தியஅரிசி பாதுகாப்புமுறை ரஷ்யர் பாராட்டு

சென்னை, அக் 26

இங்கு நடைபெற்ற தென்கிழக்காசிய பிராந்திய அரிசி கருத்தரங்கில் சோவியத் நிபுணர்களான பேராசிரியர் வி. பெரிஸ்லோவும் (மாஸ்கோவிலுள்ள திமிரிய சேவ் வேளாண்மைக் கல்லூரிப் பேராசிரியர்) சோவியத் நெல் அரைக்கும் துறையின் பிரதிநிதி திரு. இகோர் லியபேனுவும் கலந்து கொண்டனர்.

அவர்கள் ரசாயனங்களைப் பயன்படுத்தி நெல்லைப் பாதுகாப்பது சம்பந்தமான இந்திய முறையை மிகவும் பாராட்டினர். ரசாயனங்களைப் பயன்படுத்தி நெல்லைப் பாதுகாப்பது வேகவைப்பது, உலர்த்துவது பற்றிய இந்திய நிபுணர் திரு. சுப்பிரமணியனின் ஆய்வுரையை அவர்கள் கருத்தரங்கில் கேட்டனர். "இதில் இந்திய அநுபவத்தை நாங்கள் ஆராய விரும்புகிறோம். இந்த முறையைச் சோவியத் யூனியனில் பயன்படுத்தும் வாய்ப்புக்கள் உள்ளனவா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறோம்" என்று சோவியத் நிபுணர்கள் கூறினர். திருவாரூரில் நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ள நெல் அரவை ஆலைத் தொகுதிக்கு அவர்கள் விஜயம் செய்யும் போது இதுபற்றி அவர்கள் தெரிந்து கொள்வர். இந்திய முறையில் நெல்லை வேகவைத்து உலர்த்தும் போது அரிசி அதிகமாகச் சேதாரம் அடையாது என்று அவர்கள் கூறினர்.

இந்த ஆறு நாள் கருத்தரங்கு, இந்திய அரசின் ஒத்துழைப்புடன் "இகாபே" 'உணவு விவசாய ஸ்தாபனம்' 'யுனிடோ' முதலிய அமைப்புக்களால் நடத்தப்பட்டது. இதில் 50 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

......

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம் புதன் காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலைப் பொழுதுபோக்கு மன்றத்தின் வருடாந்த விளையாட்டு விழா இம்மாதம் 31-ம் திகதி காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கிறது அன்றுகாலை நடைப்போட்டி மரதன் ஓட்டம், ஆண் பெண் சயிக்கிள் ஓட்டம் ஆகியவை ஆரம்பமாகும். பிற்பகல் அடுத்த விளையாட்டுக்கள் தொடங்கும். கூட்டுத்தாபனத் தலைவர் உட்பட பல உயர் அதிகாரிகளும் விழாவில் கலந்துகொள்வர்.

......

## ஒழுங்கைவிஸ்தரிப்பு

சுழிபுரம் செவ்வாய்

தொல்புரம் பகுதியிலுள்ள பகிரங்க ஒழுங்கைகள்யாவும் இருபத்திநாலு அடிக்குமேல் பிரிக்கப்பட்டு அகலிக்கப்படும் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. சுழிபுரம் கிராமசபைத் தலைவர் திரு சு. கந்தசாமி, வட்டார அங்கத்தவர் வ. பொன்னுத்துரை ஆகிய இருவரும் ஒழுங்கை எல்லைகளை வகுக்கும் பணியைச் செய்துவருகின்றனர்.


ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்,
ஜெய்சங்கர் — விஜயலலிதா நடித்த
நூற்றுக்கு நூறு

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சௌகார் ஜானகி
(இரு வேடங்களில்)
ரவிச்சந்திரன் - எம். ஆர். ஆர். வாசு
நடித்த
காவியத்தலைவி

தமிழ் நாட்டில் 58 வாரங்களும், ஈழத்தின் தலைநகர் கொழும்பில் 275 நாட்களும் தொடர்ச்சியாக காட்சியளித்து பெரும் சாதனையை நிலைநாட்டி
இப்பொழுது யாழ். மக்களுக்கு விருந்தளிக்கின்றது
லிடோ [யாழ்நகர்]
காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30.
ஆராதனா
(ஈஸ்ட்மன்கலர் சித்திரம்)
ராஜேஷ்கன்னா ✶ ஷர்மிளா தாகூர்
சுஜித்குமார் ★ பரீடா ஜலால்
நடித்தது.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள். சனி, ஞாயிறு 4 காட்சிகள்.
2 தினங்கள் மட்டும்
அக்கா தங்கை
29-ந் திகதி முதல்
★ ரவிச்சந்திரன்
✶ ஜெயலலிதா
✶ நாகேஷ்
✶ அசோகன்
✶ ஷீலா
நடித்த

மூன்றெழுத்து
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் ஸினிமா
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 10-00
சிவாஜி - வாணிஸ்ரீ
நடித்த
நிறைகுடம்

நாகம்ஸ்ஸினிமா
சுன்னாகம்
தினசரி: 4-30
சனி, ஞாயிறு: 10-30
AMERICA BY NIGHT
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
நில் கவனி காதலி

ராஜா
(யாழ்ப்பாணம்)
(தினசரி 4காட்சிகள்)
சாரதா
நடித்த
துலாபாரம்
(புதிய கொப்பி)

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p.m.
Sat-Sundays 10-30 a.m.
Kerwin Mathews,
Pier Angeli
in
OSS 117
PANIC IN BANGKOK
(Cinemascope-Color)
தினசரி பி.ப. 2-00, 10-00
சிவாஜி— சரோஜாதேவி
நடித்த
கல்யாணியின் கணவன்

MANOHARA
Jaffna
Daily 10-30 a.m., 4, 7, 9-45 p. m.
John Wayne
in
HATARI!
Please Come early. Special concession for a group of 50 and over.

மரவள்ளிக்கிழங்கு
ஒரு தொன் ரூபா 200-00 வீதம் கொள்வனவு செய்துவருகிறோம்.
தொடர்பு கொள்ளவும்:
ஸ்ரீலங்கா டப்பியோகா புறடக்ஸ்
C/O சுந்தரம் பிறதர்ஸ்,
73, மின்சாரநிலைய வீதி. யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. பொதுச் செயலாளருக்கு பாக். அதிபர் யாஹ்யா அழைப்பு

## இரு நாடுகளுக்கும் விஜயம் செய்ய கோருகிறார்

புதுடில்லி அக் 26

ஐ நா பொதுச்செயலாளர் யுதாண்டை பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் விரைவில் விஜயம் செய்யும்படி பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் யாஹ்யாகான் கேட்டிருக்கிறார்.

இருநாடுகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள எல்லைப் பூசல்களைத் தீர்த்துவைக்கும் வகையில் யுதாண்ட் அண்மையில் வெளியிட்டிருந்த கருத்தை ஜெனரல் யாஹ்யாகான் வரவேற்றிருக்கிறார்.

எல்லைப்பகுதிகளில் முகாமிட்டுள்ள இருதேசப்படைகளும் விலகிச்செல்லவேண்டுமென்றும் இந்தப் படைகள் விலகிச்செல்வதை ஐ நா மேற்பார்வை செய்ய வேண்டும் என்றும்யுதாண்ட் முன்பு கருத்துவெளியிட்டிருந்ததாகத் தெரிகின்றது. இதனை வரவேற்றுள்ள அதிபர் யாஹ்யாகான் நிலைமைகளை நேரில்பார்த்து நடவடிக்கை எடுக்கும் வகையில் மிக விரைவிலேயே யுதாண்ட இருநாடுகளுக்கும் விஜயம்செய்யவேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

### இந்தியாவில் போர் ஒத்திகை

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையிலான எல்லையில் ஏற்பட்டுள்ள நிலைமையின் காரணமாக இந்தியாவில் பல்பகுதிகள் ஊடுவருகை(?) லுள்ள பல நகரங்களில் போர் ஒத்திகைகள் நடைபெறுவதாகத் தெரிகின்றது.

போர் ஏற்படுமானால் பொதுமக்கள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதுபற்றிய பயிற்சியும் அளிக்கப்பட்டுவருகின்றது. பல நகரங்களில் இருட்டடிப்பு செய்யப்பட்டு பொதுமக்கள் தயார்படுத்தப்படுகிறார்கள். கல்கத்தா, பம்பாய், சண்டிகார் போன்ற நகரங்களிலும் இருட்டடிப்பு ஒத்திகை நடத்தப்பட்டது.

இருதரப்பு எல்லைப்படைகளுக்குமிடையில் தொடர்ந்து அடிக்கடி மோதல் ஏற்பட்டு வருவதாக புதுடில்லிக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### வைத்தியரை அழைக்க நவீன கருவி

சான்பிரான்ஸிஸ்கோ, அக்டோபர் 26

இருதயநோய் உடையவர்கள் தமக்கு எப்போது தாக்குதல் வரும் என்று அறிந்து வைத்தியரை உடனடியாக அழைக்கத்தக்கதான நவீன கருவி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மின்சாரத்தினால் இயங்கும் இக்கருவியை அணிவதினால் எத்தனை மணித்தியாலத்தின்பின் அல்லது எத்தனை நாட்களின் பின்பு இத்தாக்குதல் வரும் என அறிந்துகொள்ளலாம்.

---

### ஆலயப் புனருத்தாரண நடவடிக்கை

குருநகர் செவ்வாய்

நட்டான்கண்டலைச் சேர்ந்த பாண்டியன்குளம் சித்தி விநாயகர் ஆலய புனருத்தாரண வேலைகளுக்கான ஏற்பாடுகளை அண்மையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள திருப்பணிச்சபையினர் மேற்கொண்டுள்ளனர். இவ்வாலயத்தின் பண்டைய சிறப்பு வரலாறுகளையும் இக்கோவிலுக்குரிய பண்டைய தொடர்புகளையும் இப்பகுதி மக்களுக்கு எடுத்துக்காட்டுவதிலும் கோவில் கட்டட நிர்மாண வேலைகளுக்கு நிதிசேர்க்கும் முயற்சியிலும் இச்சபை தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. இக்கோவிலுக்குத் தொடர்புள்ள ஏனைய பகுதிகளிலும் நிதிசேர்ப்பதற்கான முயற்சிகளை இச்சபையின் செயலாளர் செ. புண்ணியமூர்த்தி செய்துவருகின்றார்.

## "வலுத்தாக்குதலை சகிக்கமாட்டோம்"

— ஜகஜீவன்ராம்

புதுடில்லி, அக் 26

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே போர் மூளுமானால், நாம் எமது நாட்டைக் காப்பாற்றுவதோடு மட்டும் நிற்கமாட்டோம் பகைவர்கள் அவர்கள் நாட்டுக்குள் விரட்டப்படுவதோடு அவர்கள் நாட்டிலேயே சண்டை செய்யும் நிலையைத் தோற்றுவிப்போம்.

இவ்வாறு இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் கடும் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

புதுடில்லியில் நடைபெற்ற பாதுகாப்பு ஆலோசனைக் கூட்டத்தில் திரு. ஜகஜீவன்ராம் மேலும் பேசுகையில், இந்தியா எப்பொழுதும் பாகிஸ்தான் மீது ஆக்கிரமிப்புச் செய்யாது. ஆனால் இந்தியா மீது வலுத்தாக்குதல் தொடுக்கப்பட்டால் அதை நாம் எப்பொழுதும் சகிக்கமாட்டோம் பாகிஸ்தான் கிழக்கு எல்லைப் பகுதிகளிலிருந்து தனது படைகளை விலக்கிக் கொண்டாலும்கூட இந்தியா தனது படைகளை எல்லைப்பகுதிகளிலிருந்து விலக்கிக் கொள்ளாது. பாகிஸ்தான் படைகளின் கன்றோன்மெண்ட் மிக அண்மையில் இருப்பதினால் திரும்பவும் விலகிச் செல்லும் படைகள் எல்லைகளில் விரைவில் ஆக்கிரமிப்பில் இறங்க முடியும். ஆனால் இந்தியப் படைகளின் கன்றோன்மெண்டுகள் எல்லைப்புறத்திலிருந்து 90 மைல்களுக்கப்பால் இருப்பதால் இந்தியா மீது ஆக்கிரமிப்பை பகைவர் செய்யும் பொழுது எமது படைகளை உடனடியாக எல்லைப்புறங்களுக்குக் கொண்டுசெல்ல முடியாது என்றார்.

### அசாம் முதல்வர் தகவல்

ஆசாம் மேகாலயா எல்லைகளில் பாகிஸ்தான் படைகள் மறைநடைவைகளில்(?) சர்வதேச சட்டங்களை மீறி ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக ஆசாம் மாநில முதல்வர் இன்று சட்டசபையில் தெரிவித்தார்.

ஆசாம் பகுதியில் இதுவரை ரயில் தொடர்பு, தொலைபேசித் தொடர்பு ஆகியவற்றைச் சீர்குலைக்க பாகிஸ்தானியர் 28 முறை முயற்சி செய்துள்ளதாக மேலும் அவர் தெரிவித்தார்.

---

### கால்நடைகள் திருட்டு?

கேதீஸ்வரம், செவ்

மன்னார் மாவட்டத்தில் கடந்த வாரம் பல கிராமங்களிலே எருமைகள் உட்பட ஏராளமான கால்நடைகள் இரவோடிரவாகக் காணாமல் போயுள்ளன. தொடர்ந்தும் கால்நடைகள் மாயமாய் மறைந்து வருகின்றனவாம்.

காட்டுப்பகுதிகளில் லொறிகளைக் கொண்டுவந்து கட்டாக்காலிகளை வளைத்துப் பிடித்து அவற்றைத் தூர இடங்களுக்குக் கொண்டுபோய் இறைச்சிக்காக விற்பதில் பலரைக்கொண்ட திருட்டுக்கோஷ்டி ஒன்று ஈடுபட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

## "சுதந்திரத்தின் பின் மோசமான நெருக்கடி"

கிழக்குப்பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள நிலைமையின் காரணமாக இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் மிக மோசமானதோர் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி பெல்ஜியம் தலைநகரில் கூறியிருக்கிறார். திருமதி காந்தி நேற்று பொது நிகழ்ச்சி ஒன்றில் பேசினார்.

பெல்ஜியம் பிரதமருடன் நேற்று இந்தியப் பிரதமர் சுமார் 60 நிமிடங்கள் ஆலோசனைகள் நடத்தினார் வங்காள தேசப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று ஏற்பட வேண்டும் என்று இருதலைவர்களும் ஒப்புக்கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

இந்திய மக்கள் அமைதியை விரும்புகிறவர்கள். அவர்கள் மீதுள்ள நம்பிக்கையின் காரணமாகவே இந்தநெருக்கடியான சமயத்திலும் கூட என்னால் வெளிநாடுகளுக்குப் புறப்பட்டுவர முடிந்தது என்று இந்திய பிரதம மந்திரிகூறினார்.

கிழக்கு வங்காளத்தில் ஏற்பட்டுள்ள நிலைமை இந்திய பாகிஸ்தான் பிரச்சினையல்ல கிழக்கு வங்காள மக்கள்மீது பாகிஸ்தான் கட்டவிழ்த்துவிட்டுள்ள தாக்குதல் நடவடிக்கைகளின் காரணமாக லட்சக்கணக்கான அகதிகள் இந்தியாவுக்குள் வந்திருக்கிறார்கள்.

### புதுமாதிரியான ஆக்கிரமிப்பு

இந்தப் புதுமாதிரியான ஆக்கிரமிப்பை உலகம் கவனிக்கவேண்டும் என்று இந்திய பிரதமர் சொன்னார். வேறை இந்திய மக்கள் விருக்கவில்லை. ஆனால் அவர்கள் தம்பிரதேசக் கட்டுக்கோப்பை விட்டுக்கொடுத்துவிடத் துணியமாட்டார்கள் என்றார் திருமதி காந்தி.

ஐரோப்பாவில் பதட்ட நிலை தணிந்திருப்பது பற்றி திருமதி காந்தி மகிழ்ச்சி தெரிவித்தார். சர்வதேச உறவுகள் விடயத்தில் பெல்ஜியம் காட்டிவரும் பரந்த மனப்பான்மையை திருமதி காந்தி பாராட்டினார்

திருமதி காந்தி சுவீடன் பிரதமருடன் நேற்று ரெலிபோனில்தொடர்புகொண்டு பேசினார். வங்காள தேச நிலைமை பற்றி திருமதி காந்தி சுவீடன் பிரதமருக்கு விளக்கியதாகத் தெரிகின்றது. சுவீடனுக்கும் வரும்படி சுவீடிஷ் பிரதமர் திருமதி காந்தியைக் கேட்டுக் கொண்டார். வசதி கிடைக்கும்போது பின்னர் ஒரு சமயம் சுவீடனுக்கு வருவதாக திருமதி காந்தி பதிலளித்தார்.

பாகிஸ்தான்-இந்தியா இரு நாடுகளும் சண்டையைத் தவிர்க்கவேண்டும் என்று பெல்ஜியம் பிரதமரும் இந்திய பிரதமரும் ஒப்புக்கொண்டிருப்பதாக பிரஸ்ஸல்ஸ் செய்தி கூறுகின்றது.

### அச்சுறுத்தும் பிரச்னை

இந்தியாவுக்குள் வந்து குவிந்துள்ள கிழக்குப்பாகிஸ்தானியர்களினால் ஏற்பட்டுள்ள பிரச்னை மிகவும் அச்சுறுத்துவதாக விருக்கின்றது என்று அகதிகளுக்கான ஐ.நா. ஹைகமிஷன் இளவரசர் ஆகாகான் ஒட்டாவாவில் கூறியிருக்கிறார்.

இந்தப் பிரச்னையை தம் சமாளிப்பதற்கு உலக நாடுகள் பெருமளவில் உதவ வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். கனடா அரசாங்கம் தாராள [illegible] டார்.

தைவானுக்கு ஆதரவான

## அமெரிக்காவின் தீர்மானம் ஐ. நா. சபையில் தோல்வி

நியுயோர்க், அக். 26

**தேசிய சீனாவை ஐ. நா. சபையிலிருந்து வெளியேற்றுவதைத் தடைசெய்வதற்கு அமெரிக்கா எடுத்த முயற்சி தோல்வியடைந்துள்ளது**

தைவானை ஐ. நா. சபையிலிருந்து வெளியேற்றுவது 'மிக முக்கியமான விஷயம்' என்று அறிவிக்கவேண்டும் என்று கூறும் அமெரிக்கத் தீர்மானம் ஐ நா. பொதுச் சபையில் தோல்வியடைந்ததே இதற்குக் காரணம். தைவானை வெளியேற்றுவது 'முக்கியமான விஷயம்' என்ற தீர்மானம் நிறைவேறியிருக்குமானால் சபையின் அங்கத்தவர்களில் மூன்றில் இரு பகுதியினர் ஆதரவாக வாக்களித்தால் அல்லாமல் தைவானை சபையிலிருந்து வெளியேற்றமுடியாது

இப்பொழுது மேற்படி அமெரிக்கத் தீர்மானம் தோற்றுவிட்டதால் தைவானை வெளியேற்றுவதற்கான அல்பேனிய தீர்மானம் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேறினாலும்போதும். அமெரிக்கத் தீர்மானத்தின் மீது வாக்களிப்பு நடைபெற்றபோது 59 நாடுகள் எதிராக வாக்களித்தன. 56 நாடுகள் ஆதரித்தன; 15 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

இந்தத் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடைபெறுவதை 24 மணி நேரம் ஒத்திப்போடவேண்டும் எனக்கோரி சவூதி அரேபியாவும் பிலிப்பைன்சும் இதற்கு முன்னர் கொண்டுவந்த தீர்மானமும் சபையில் தோல்வியடைந்தது. இதற்கு சாதகமாக 53 நாடுகளும் எதிராக 56 நாடுகளும் வாக்களித்தன. 19 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை

தைவானை வெளியேற்றுவது 'முக்கியமான விஷயம்' என்ற அமெரிக்கத் தீர்மானம் தோல்வியடைந்ததால் இருசீனாக்களுக்கும்ஐ நாவில் இடமளிக்கவேண்டும் என்ற அமெரிக்கத் தீர்மானம் பயனற்றுப்போய்விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டமானாறு

# நன்னீர்த் திட்டம் அதிக தாமதமாகும்

பருத்தித்துறை, செவ்.

தொண்டமானாறு நன்னீர்த்திட்டம், எதிர்பார்த்த இலக்கை அடைவதற்கு மேலும்பல வருடங்களாகுமென நம்பப்படுகிறது. கடந்த ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டும் கடல்நீர் உள்ளூரிப் பகுதிக்குள் பெருமளவு திறந்து விடப்படுவதால் இத்திட்டம் பயனளிப்பதற்கு அநேக வருடங்கள்பிடிக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. ஊழியர் பலரை அரசாங்கம் நியமித்துப் பொதுப் பணத்தைச்செலவுசெய்தும், அடையவேண்டிய இலக்கு மேலும்தூரவிலகிக் கொண்டு போவதால், நன்னீரால் பயனடையவேண்டிய பகுதி மக்களிடையே ஏமாற்றமும் விரக்தி மனப்பான்மையும் ஏற்பட்டுள்ளது. வல்லைப் பகுதியையும் அதையடுத்துள்ள வலைமைக் கின் திரணமுள்ள காணிகளையும் விவசாய நிலமாக்குவது இந்நிலையில் இயலாதென்றே பேசிக்கொள்ளப்படுகிறது.

## கூட்டுறவு அடிப்படையில் கண்ணாடித் தொழில்

### உடுப்பிட்டி எம். பி. விளக்குகிறார்

பருத்தித்துறை, செவ்.

வல்லிபுரத்தில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள கண்ணாடித் தொழிற்சாலையை அரசாங்கம் நிறுவாமல் தட்டிக்கழித்தாலும் நாம் கூட்டுறவு அடிப்படையில், ஒரு கண்ணாடித் தொழிற்சாலையமைக்கத் தயாராக இருக்க வேண்டும்.

இவ்வாறு பருத்தித்துறை, புலோலி, உடுப்பிட்டி, கடைவேலி ஆரம்ப கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்தில் பேசிய உடுப்பிட்டி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. க. ஜெயக்கொடி கூறினார். மேற்படி சங்கப் பிரதிநிதிகள் இத்திட்டத்தை ஆராய்ந்து வருகின்றனர்.

இவ்விஷயம்பற்றிக் கைத்தொழில் அமைச்சர் திரு. சுபசிங்காவுடன் கலந்து வெளிநாடுகளிலிருந்து நவீன இயந்திரங்கள் பெற்றுக்கொள்வது பற்றியும், மற்றும் அரசாங்க உதவிகள் பற்றியும்ஆலோசிக்கவிருப்பதாகவும் திரு ஜெயக்கொடி கூறினார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6-30. பகல் 12-45 மாலை 6-00. இரவு 9-00)

29ம் மீ அலை 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 பண்ணிசைச்செய்திகள், 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல் வகை, 8-00 இசைவேளை, 8-15இஸ்லாமிய கீதம்.

இரவு6-10 வாத்தியஇசை 6-15 கிறிஸ்தவ நிகழ்ச்சி, 6-30 பாட்டு. 7-00 கண்ணி காவியம், 7-15 திருக்குறள் அமுதம், 7-30 வாத்தியக்கோஷ்டி 7-45 நாடகம் 8-00முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி, 10-30 செய்தித்தொகுப்பு. ......

## "அடக்கமான வித்துவான்"

யாழ்ப்பாணம், புதன்

"அமரரான தமிழ் வித்துவான் சாவகச்சேரி முருகப்பா கலைக்குச் செய்த தொண்டு ஈடுஇணையற்றது. அவர் மிக்க அடக்கமான வித்துவான். அவரது ஆத்மா கலைத்தேவியின் பாதாரவிந்தம் அடைந்து சாந்திபெறப் பிரார்த்திப்போம்" என்று கரைச்சிக்கலை அபிவிருத்தி சபை அண்மையில் காலஞ்சென்ற தமிழ் வித்துவான் முருகப்பாவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாகக் கூடிய கூட்டத்தில் தீர்மானம் நிறைவேறியது. அன்னாரின் ஆன்ம சாந்திக்காகச் சில நிமிடங்கள் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது

(கு.வி.ம.)

## சிவதீட்சையின் சிறப்பு

யாழ்ப்பாணம், புதன்

சிவதீட்சை பெற்றபின்பே உண்மைச் சைவர்கள் ஆகின்றோம். பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரிப்பதால் எம்மை பிடித்த கஷ்டங்கள் எல்லாவற்றையும் போக்கிக்கொள்ளலாம். சிவதீட்சை ஏழு வயதில் பெறவேண்டும் என்பதே நியதி'

இவ்வாறு யாழ்ப்பாணம் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் நடைபெற்ற 'சிவதீட்சை அளிப்பு' வைபவத்தின் போது பிரதம குருக்களாகக் கலந்துகொண்ட ஸ்ரீலஸ்ரீ தி. கல்யாணசுந்தரக் குருக்கள் மேற்கண்டவாறு கூறினார். மேற்படி வித்தியாலய மாணவ மாணவிகளும் ஆசிரியர்களும், பெற்றோர்களுமாக நூற்றுக்கு மேற்பட்டோர் சிவதீட்சை பெற்றுக்கொண்டனர்.

## கோப்பாயில் கம்யூ. வா. ச. கிளை

உரும்பராய், செவ்.

கோப்பாயில் கம்யூனிஸ்ட் கட்சி வாலிபர்சங்கமொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. வடபிரதேச கம்யூனிஸ்ட்கட்சி வாலிபசங்கத் தலைவரும் கோப்பாய்த்தொகுதி வாலிபர் சங்க அமைப்பாளருமான திரு. க. தவஞானம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் வடபிரதேச வாலிபர்சங்க செயலாளர் திரு. எஸ். விஜயானந்தன் குத்துவிளக்கேற்றி சங்கத்தைத் திறந்துவைத்தார்.

உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: ஆர். தவராசா, உபதலைவர்: ஆர். விக்கினேஸ்வரன், செயலாளர்: பி. கதிர்காமநாதன், உபசெயலாளர்: இ. புவனேஸ்வரன். பொருளாளர்: சோமாஸ்கந்தன். 9 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது

## சாரணர் சிரமதானம்

பருத்தித்துறை, செவ்.

இம்மாதம் 31-ம் திகதி நடைபெறவுள்ள தொண்டமானாறு வெளிவேலை விஞ்ஞான ஆராய்ச்சி மண்டபத் திறப்புவிழாவை யொட்டி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலய சாரணர் இம் மண்டபத்தைச் சூழவுள்ள பகுதியை சிரமதான படையில் துப்புரவு செய்தனர்.

## பெற்றோர் முறையீடு

வல்வெட்டித்துறை, செவ்

பருத்தித்துறைத் தொகுதியில் அநேக பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை இருப்பதாகவும் இதனால் பிள்ளைகளின் கல்விபாதிக்கப்படுவதாகவும், இப்பகுதியில் உள்ள பெற்றோர்கள் பலர் பருத்தித்துறைத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினத்தை நேரில்கண்டு முறையிட்டுள்ளனர். குறிப்பாக வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை அதிகம் இருப்பதாகக் கூறப்பட்டது.

## ஆண்டுவிழா கொண்டாடினர்

யாழ்ப்பாணம், புதன்

அல்லாரை அறகம்புலம் மகாகணபதிப்பிள்ளையார் கோவில் கூட்டுப்பிரார்த்தனை சபை அதன் மூன்றாவது ஆண்டுவிழாவைக் கொண்டாடியது.

திருவாளர்கள் பொ.நமசிவாயம், இ. வேலுப்பிள்ளை, அ. நாகராசா, மு. காசித்தம்பு, வி. க. தம்பு முதலியோர் பேசினார்கள்.

(கு. வி. ம)

## கோவில்மீது இடிவிழுந்தது!

குருநகர், செவ்வாய்

கோவில் மூலஸ்தான தூபி மீது இடி விழுந்து தூபிமுடி கோவில் முகாமையாளரின் வளவுக்குள் விழுந்தது. இச்சம்பவம் அனலைதீவில் நடைபெற்றது.

அனலைதீவு தெற்கு முருகமூர்த்தி கோவில் மூலஸ்தான தூபி மீதே இடி விழுந்தது. கந்தசஷ்டி ஆரம்பதினத்திற்கு முன்தினமிரவு இது நிகழ்ந்தது. இச்சம்பவம் இப்பகுதிமக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## சிரமதான மூலம் ஆலயப் பணி

கேதீஸ்வரம், செவ்

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ச. கதிர்காமநாதன் தலைமையிலே பல அரசாங்க ஊழியர்களும் பொதுமக்களும் திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிக்குச் சிரமதானம் செய்தார்கள். மேற்படி ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுப் புதிய கட்டடவேலைகள் நடைபெற்று வருகின்றன. [illegible] நாட்டின் நாலாபக்கங்களிலும் இருந்து கோவிலடிக்கு வரும் பக்தர்கள் அவ்வப்போது சிரமதானப் பணிகள் மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது.

## "மாண்புமிக்க மனிதப்பிறவி"

அரியாலை, செவ்.

"மனிதப் பிறவி மாண்பு மிக்கது. அது மற்றும் பிறவிகளிலும் பார்க்க உயர்ந்ததாதலால் அதனை மாண்புடைய பிறவியாக கொள்ளப்படுகிறது. இதற்குக் காரணம் மற்ற உயிர்களை விட மன உணர்வு என்ற ஒரு மேலான பகுத்தறிவு இருப்பதே"

மேற்கண்டவாறு யாழ்நாயன் மார்க்கட்டு சைவசமய அபிவிருத்திச்சபையினால் ஆரம்பிக்கப்பட்ட அறுபத்து மூவர் குருபூசையை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய திரு. "சொக்கன்" குறிப்பிட்டார்.

மேலும் அவர்தமது உரையில் இந்துக்களாகிய நாம் அறுபத்தி மூன்று நாயன்மார்களின் குருபூசைகளை ஒவ்வொரு ஆலயங்களிலும், ஒவ்வொரு இந்து சமய சம்பந்தமான சபைகளிலும் கொண்டாட வேண்டும்." என்றார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவீப் முடிவுகள்

கோட்டை, திங்கள்

தேசிய லொத்தர் சபையின் 368-வது சுவீப். சீட்டிழுப்புமுடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு

21 C 0752 ரூ. 75,240

2ம் பரிசு

07 O 0043 ரூ. 30,096

3ம் பரிசு

19 T 0716 ரூ. 7,524

தலா ரூ. 376.20 சதம் பரிசுபெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 14 A 0915 | 15 A 0748 |
| 16 A 0992 | 28 A 0510 |
| 10 B 0191 | 11 B 0601 |
| 20 B 0545 | |
| 06 C 0685 | 08 C 0075 |
| 12 C 0639 | 13 C 0945 |
| 06 D 0658 | 09 D 0957 |
| 10 D 0752 | 13 D 0589 |
| 15 D 0270 | 17 D 0818 |
| 01 E 0049 | 16 E 0570 |
| 31 E 0099 | |
| 06 F 0008 | 07 F 0352 |
| 08 F 0895 | 12 F 0343 |
| 18 F 0392 | 21 F 0191 |
| 14 G 0865 | 17 G 0387 |
| 18 G 0623 | 23 G 0330 |
| 28 G 0190 | |
| 01 H 0564 | 03 H 0559 |
| 04 H 0661 | 09 H 0183 |
| 13 H 0578 | 16 H 0525 |
| 29 H 0578 | |
| 08 J 0564 | 14 J 0526 |
| 21 J 0245 | 30 J 0936 |
| 23 J 0021 | |
| 05 K 0335 | 09 K 0563 |
| 22 K 0119 | 26 K 0152 |
| 23 K 0824 | 05 L 0753 |
| 02 M 0176 | 06 M 0270 |
| 06 M 0750 | 18 M 0780 |
| 20 M 0968 | 02 N 0232 |
| 29 O 0878 | |
| 04 P 0453 | 05 P 0244 |
| 15 P 0148 | 20 P 0878 |
| 25 P 0921 | |
| 03 Q 0783 | 12 Q 0737 |
| 27 Q 0135 | |
| 10 R 0244 | 26 R 0709 |
| 05 S 0570 | 08 S 0702 |
| 10 S 0827 | 13 S 0989 |
| 16 S 0869 | 26 S 0845 |
| 29 S 0231 | 24 T 0430 |
| 28 T 0974 | 06 U 0299 |
| 19 U 0707 | 07 V 0127 |
| 08 V 053[illegible] | 15 V 0204 |
| 29 V 0967 | 02 W 0374 |
| 01 X 0015 | 04 X 0295 |
| 08 X 0939 | 18 X 0267 |
| 18 X 0839 | 22 X 0187 |
| 28 X 0262 | 11 Y 0182 |
| 14 Y 0493 | 15 Y 0380 |
| 17 Y 0359 | 25 Y 0615 |
| 25 Y 0667 | 26 Y 0861 |
| 30 Y 0718 | 09 Z 0155 |
| 12 Z 0202 | 16 Z 0576 |

இவை யாவும் உறுதிப் படுத்தப்படவேண்டும்.

# மின்சாரக் கட்டணம் உயரும்?

கொழும்பு, திங்கள்

மஸ்கெலியா திட்டத்தை உலகவங்கியின் மின்சாரப் பகுதித் தலைவர் திரு. டேரூலக் இக்னெருவாகப்பாராட்டியுள்ளார். இந்தத்திட்டம் மிகவும் சிறப்பாக வெற்றிப்பாதையில் சென்றுகொண்டிருக்கிறது. இத்திட்டத்தின் மூலம்நாட்டிலுள்ள நகரப்பகுதிகள் கிராமப் பகுதிகள் ஆகியவற்றிற்கு மின்சாரம் முழு அளவில் விநியோகிக்கமுடியும் என்று இலங்கை மின்சார சபைத் தலைவர் திரு வி. டபிள்யூ. மெண்டிஸ் தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தி நிருபர்கள் மகாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில், உத்தேசத்திட்டம் கிராமப் புறங்களுக்கு மின்சாரத்தை அளிப்பதை முக்கியநோக்காகக்கொண்டுள்ளது. இது கிராமப்புறங்களில் ஏற்படுத்தப்படும். கிராமக்கைத்தொழில் அபிவிருத்திக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்றார்.

மஸ்கெலியா நீர்மின்சாரத் திட்டத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்தியைப்பற்றி ஆலோசனை கூறுவதற்காக உலக வங்கியின் மின்சாரப் பகுதித் தலைவர் இலங்கை வந்துள்ளார். இந்த இரண்டாம் கட்ட வேலைகள் பூர்த்தியானதும் இங்கு 100 மெகவாட் மின்சக்தி உற்பத்தி செய்யமுடியும்.

இலங்கை மின்சார சபைக்கு நாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் 54 லட்சம் ரூபாவும் அரசாங்க பகுதிகள் திணைக்களங்கள் 23லட்சம்ரூபாவும் கடனாகக் கொடுக்கவேண்டியுள்ளது. இதனைப் பெறுவதற்கு ஏற்ற முறையில் மின்சார அதிகாரச்சட்டம் திருத்தி அமைக்கப்படுமென திரு. மெண்டிஸ் தெரிவித்தார்;

கைத்தொழில் மற்றும் வீட்டுப்பாவனைக்கு செலவிடப்படும் மின்சாரக் கட்டணம் மேலும் அதிகரிக்கப்படுமென மின்சாரசபை வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. மின்சார விநியோகத்திற்கான உபகரணங்களின் விலை தலைக்கு மேல் அதிகரித்திருப்பதே இதற்குக்காரணம் எனச் சொல்லப்படுகிறது.

[இ. பி. ஏ]

காரியம் வெற்றி பெறறதும் பணம் செலுத்த வசதி

ஆயினும் வெற்றி கிட்டிய பின்னும் பணம் செலுத்தாமல் வஞ்சிப்பவர்களிடமிருந்து மாந்திரீக முறையில் பணம் பெறுவது எனது பொறுப்பாகும்,

நான் செய்து கொடுத்த பரிகாரம் இதுவரை பிழைத்ததில்லை.

14 நாட்களில் இரகதோஷங்கள் விலக, தொழில் கிட்ட, வியாபாரத்தில் நட்டமடையாது முன்னேற, வீட்டில் எப்போதும் ஏற்படும் நோய்நொடி துன்பங்கள் ஒழிய, தான் விரும்புபவர் எவராயிருப்பினும் வசப்படுத்திக்கொள்ள, மூத்தோர் விருப்பத்தைப்பெற, வேண்டாதவர்களை ஒதுக்கிவிட, பகைவர்களுக்குத் தண்டனை அளிக்க மற்றும், பரீட்சை, பந்தயம், நேர்முகப் பரீட்சைகளில் உயர்வான முறையில் வெற்றிபெற இவற்றைவிட இன்னும் தேவையான எந்தக்காரியத்திற்கும் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்.

நேரில் சந்திக்க விரும்புவோர் கடிதம் எழுதி வசதியான நாளை ஒதுக்கிக்கொள்ளவும், 3 மாதங்களில் பணம் செலுத்த வசதி செய்து கொடுப்பேன்.

பரீட்சையில் சித்தியடைந்த பின் பணம் செலுத்துங்கள்

மாந்திரீக பலத்தினால் சித்தியடையச்செய்யக்கூடியவன் நான் மட்டும்தான் என்பதை மீண்டும் தெரியப்படுத்துகிறேன்.

சென்ற ஆண்டில் என்னிடம் 4383 பேர் மாந்திரீகம் செய்து சித்தியடைந்துள்ளார்கள்.

நீங்கள் எடுக்கும் எல்லாப் பாடங்களையும் குறிப்பிட்டு. பிறந்த நேரத்தை அல்லது பெருவிரல் அடையாளத்தை குறிப்பிட்டு எழுதி விபரங்களை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்.

வி. ராமையா, ஜோதிடர் V. G.

# புகைப்படச் சுருள் தட்டுப்பாடு

கோட்டை, திங்கள்

புகைப்படச் சுருள்கள், காகிதங்கள். பல்புகள் போன்ற பொருட்களுக்குச் சமீபகாலமாக ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக பெருந்தொகையான புகைப்பட நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. 5 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவேண்டிய புகைப்படச்சுருள் தற்போது 10 ரூபா வரை விற்கப்படுவதாகத்தெரிகிறது இவ்வாறான விலை ஏற்றத்தினாலும் தட்டுப்பாட்டாலும் நாட்டின் பலபகுதிகளிலும் மூடப்படும் புகைப்பட நிலையங்களது எண்ணிக்கை அதிகரித்துள்ளது இத்தட்டுப்பாடு நீங்காவிடில் அநேகர் தம் வேலையை இழக்கநேரிடும் ஆகவே இதுசம்பந்தமாக உடனடிநடவடிக்கை எடுக்கும்படி வர்த்தக அமைச்சர் திரு டி பி இலங்கரத்தினவுக்கு மகஜர்கள் பல அனுப்பப்பட்டுவருவதாகத்தெரிகிறது.

# தீயினால் நாசம்

கொடிகாமம், திங்கள்

திடீரென வீடு தீப்பற்றியதினால் விவசாய உபகரணங்கள் சேதமுற்றன. இச் சம்பவம் விசுவமடு ஆண்கள் குடியேற்றத் திட்டத்திலுள்ள ஏகாம்பமூர்த்தி என்பவரது வீடே இவ்வாறு விபத்துக்குள்ளானதாகும். இக் குடியேற்றத் திட்டத்தின் அருகிலுள்ள காடுகளில் மூட்டப்பட்டிருந்த தீயினாலேயே இவ் வீட்டிலும் தீ பற்றியதாகத் தெரிகிறது; இவ்வீட்டினுள் இருந்த உழவு யந்திரம் எவ்வித சேதமுமின்றி மீட்கப்பட்டது.

# இவர்கள் கஷ்டம்

சுழிபுரம், செவ்

சுழிபுரம் பகுதியில் வாழும் மக்கள் தொலைபேசிப் பாவனைக்கு நீண்டதூரம் செல்லவேண்டிய கஷ்டநிலையிலுள்ளனர். சுழிபுரம் தபால் கந்தோரில் தொலைபேசித் தொடர்பு இருந்தபோதிலும் தினமும் தொடர்பு துண்டிக்கப்படுவதாலும் பயிற்சிபெற்றவர் நிலையம் வேலைசெய்ய மறுப்பதாலும் இப்பகுதி மக்களுக்கு இவ்வித கஷ்டம் ஏற்பட்டுள்ளது

# புதைகுழியில் சிசுவின் சடலம்! இளம்பெண்கைது

யாழ்ப்பாணம், செவ்

சிசுவொன்றை பொலிசார் புதைகுழியிலிருந்து எடுத்ததைத் தொடர்ந்து சொர்ணம் என்ற இளம்பெண் கைது செய்யப்பட்டார். இச்சம்பவம் புதுக்குடியிருப்பில் நடந்துள்ளது. ஐயாத்துரை என்பவர் கொடுத்த தகவலைத்தொடர்ந்து பொலிஸார் உடனடியாக நடவடிக்கை எடுத்தனர். சிசுவின் பிரேதம் பரிசோதனைக்காக கொழும்பு சட்ட வைத்திய[illegible]க்கு அனுப்பப்பட்டுள்ளது.

# விவசாயிகளுக்குகடன் வழங்கஅமைச்சு முடிவு

கோட்டை, திங்கள்

விவசாயிகளுக்கு மீண்டும் கடன் வழங்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. விவசாய அமைச்சு அடுத்த ஆண்டு 5கோடி 35 லட்சம் ரூபாவை விவசாயிகளுக்கு குறுகிய காலக்கடனாகக் கொடுக்க வசதி செய்துள்ளது.

இத்தகவலை விவசாயகாணி அமைச்சர் திரு. ஏச். கொப்பேகடுவ தெரிவித்தார்.

சென்ற ஆண்டு விவசாயிகளுக்கு அரசாங்கம் கொடுத்த கடனுதவியைவிட இது 2கோ 5 லட்சம் ரூபா அதிகமாகும். விவசாயிகளுக்கான அரசாங்கத்தின் கடனுதவி 1967ம் ஆண்டிலிருந்து குறைந்து வந்துள்ளது. இக்குறைவிற்குக் காரணம் கடன்பெற்ற விவசாயிகள் தாம் பெற கடன்களைத் திருப்பிக்கொடாமையே என்று அமைச்சு வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

இப்புதிய கடனுதவி கிராம அடிப்படையில் வழங்கப்படும் என அமைச்சர் திரு. கொப்பேகடுவ தெரிவித்தார்.

# கல்வித் திட்டத்திற்கு வரவேற்பு

மன்னார், செவ்

"அடுத்த ஆண்டு மே வரும் பிலிருந்து அமுல் நடத்தப்படவிருக்கும் கல்வித் திட்டத்தை எமது சங்கம் பூரணமாக ஆதரிக்கிறது. இத்திட்டத்தினால் கிராமப்புறப்பிள்ளைகள் பயனடைவர், என்று மன்னார் பரப்புக்கடந்தான் அ. த. க. பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் தலைமைவகித்துப் பேசிய திரு. ஏ. நித்தியானந்த ராஜா கூறினார்.

அடுத்த ஆண்டிலிருந்து இப்பாடசாலையில் 6-ம் வகுப்பை நடத்தவழி செய்யவேண்டுமென்றும் பகுதிநேர ஆசிரியர்களையும் ஒரு ஆசிரியையையும் நியமிக்குமாறு கல்விப்பகுதியைக் கோருவதென்றும், பாடசாலைக்கு மலகூடவசதி தண்ணீர் மற்றும் ஆசிரியர் விடுதிவசதிகள் ஏற்படுத்துவதென்றும், பாடசாலைகளை ஒருங்கிணைக்கும் போது பெற்றோர் ஆசிரியசங்கங்களையும் கலந்து கொள்ளவேண்டுமெனக் கோருவதென்றும் கூறும் தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

யாழ்ப்பாணம், திங்கள்

மலரக விதை நெல்லை அரசாங்கம் கிளிநொச்சி விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது: இவ்விவசாயிகளுக்கு உரப்பசளையும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்க ஏற்பாடுசெய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

# பிரயாணிகள் நிலைமை

நெடுந்தீவு, செவ்வாய்

பருவமழை ஆரம்பமாகியுள்ள இவ்வேளையில் நெடுந்தீவு- குறிகாட்டுவான் சேவையில் ஈடுபட்டுவரும் எலாரு மோட்டார் படகின் கூரைத்திறப்போடப்பட்டுள்ள தறப்பாள் சிலை கிழிந்து மோசமான நிலையில் இருப்பதால் மழைபெய்யும்போது பிரயாணம் செய்யும் பிரயாணிகள் நனைந்து கொண்டே பிரயாணம் செய்ய வேண்டியுள்ளது.

கடல் கொந்தளிப்பையும் காற்றையும்-மழையையும் சமாளிப்பதற்கு உகந்த மோட்டார் படகான இராஜேஸ்வரியைப் பழுதுபார்த்து சேவைக்கு விடாவிட்டால் நெடுந்தீவு பிரயாணிகள் இவ்வருட மழைகாலத்தில் பெரும் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டி ஏற்படும்.

நெடுந்தீவு பிரயாண சேவையில் ஈடுபட்டுவரும் பொதுமராமத்து இலாகாவிற்குரிய மோட்டார்படகுகள் நான்கிலும் எலாருவைத் தவிர்ந்த ஏனைய மோட்டார் படகுகள் இராஜேஸ்வரி, வில்லம்பிறே, அலைமகள் ஆகிய மூன்று மோட்டார் படகுகளும் பழுதடைந்த நிலையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

கேரதீவு-சங்குப்பிட்டி

# போக்குவரத்து அதிகரிப்பு

கேதீஸ்வரம், செவ்வாய்

கேரதீவு-சங்குப்பிட்டி மூலமான வாகனப்போக்குவரத்து இப்போது அதிகரித்துள்ளது. போக்குவரத்தில் இப்போது வசதியேற்பட்டுள்ளதே இதற்குக் காரணம்.

ஆட்கள் சவள் வலித்துச் செலுத்தும் பாதை பைத் தவிர்த்துத் தற்போது யந்திர பாதை அங்கு சேவைக்கு விடப்பட்டிருப்பதால் குறித்த மார்க்கமாக வாகனப் போக்குவரத்துகள் அதிகரித்துள்ளன. 20 நிமிடங்களுக்கொரு தடவை யந்திரப் பாதைச் சேவை இரு கரைகளிலும் கிடைத்துக்கொண்டிருப்பதால் முன்பு மணிக்கணக்காக வாகனப் போக்குவரத்து முடங்கிக்கிடக்கும் நிலைமை நீங்கியுள்ளது. கடலில் நீரின் போக்கையும் காற்று வீச்சையும் அனுசரித்தே முன்னர் பாதை சேவையாற்ற வேண்டியிருந்ததால் இப்பகுதியில் வாகனப் போக்குவரத்துக் குறைந்திருந்ததுடன் வரும் வாகனங்களும் மணித்தியாலக்கணக்காகக் காத்துக் கிடக்கவேண்டியேற்பட்டது.

தம்பி அன் கோ.

ஆரம்பமாகி முப்பதாவது ஆண்டில்

1. ரூபா 1000/- ஜுபிலி சேமிப்பிற்கு (Jubilee Deposit)

வருடம் ரூபா 125/- வட்டி கொடுக்கப்படும்.

2. ரூபா 500/- ஜுபிலி சேமிப்பிற்கு (Jubilee Deposit)

வருடம் ரூபா 63/- வட்டி கொடுக்கப்படும்.

குறிப்பு:-

இந்த ஜுபிலி சேமிப்பில் ஒருவரிடமிருந்து ரூபா 1000/- அல்லது ரூபா 500/- வாங்கப்படும்.

மறுவிபரங்களுக்கு:-

தம்பி அன் கோ.

வண்ணார்பண்ணை — திருநெல்வேலி

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

